**செய்தி வெளியீடு** **நாள் : 30.6.2023**

**செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரத்தில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் கட்டப்படவுள்ள புதிய பேருந்து நிலையத்திற்கான இடத்தினை மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் மற்றும் மாண்புமிகு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் ஆகியோர் நேரில் சென்று கள ஆய்வு மேற்கொண்டனர்.**

**மாமல்லபுரத்தில் அமையவிருக்கின்ற இந்த பேருந்து நிலையத்தில் 6.79 ஏக்கர் நிலப்பரப்பில் 50 பேருந்துகள் ஒரே நேரத்தில் நிற்கக் கூடிய அளவிற்கு வடிவமைக்கப்படவிருக்கிறது.**

*****

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி** இன்று (30.6.2023) செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரத்தில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் கட்டப்படவுள்ள புதிய பேருந்து நிலையத்திற்கான இடத்தினை மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் மற்றும் மாண்புமிகு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

**மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி** செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரத்தில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் கட்டப்படவுள்ள புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்குண்டான அறிவிப்பு கடந்த 2006-11 ஆம் ஆண்டு மாண்புமிகு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சிகாலத்தில் மாண்புமிகு இன்றைய தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த திட்டம் கடந்த ஆட்சிகாலத்தில் கிடப்பில் போடப்பட்டு, தற்போது இந்த திட்டத்தை கொண்டு வரவேண்டுமென்று முனைப்பு காட்டி இந்த திட்டத்தை இந்த ஆண்டிலே செயல்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கவனம் செலுத்துகிறார்.

மாமல்லபுரத்தில் அமையவிருக்கின்ற இந்த பேருந்து நிலையத்தில் 6.79 ஏக்கர் நிலப்பரப்பில் 1 லட்சத்திற்கும் மேற்பட்ட சதுரடியில் 50 பேருந்துகள் ஒரே நேரத்தில் நிற்கக் கூடிய அளவிற்கு வடிவமைக்கப்படவிருக்கிறது. இந்த பேருந்து நிலையம் வரபெற்றால் மாமல்லபுரத்தில் ஏற்கனவே இருக்கின்ற பழைய பேருந்து நிலையத்தில் போக்குவரத்து நெரிசல் கட்டுப்படுத்தப்படும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

மாமல்லபுரத்தில் தற்போதுள்ள பேருந்து நிலையம் 0.31 ஏக்கர் பரப்பளவில், 10 பேருந்துகளை நிறுத்தும் திறன் கொண்டது. சென்னைப் பெருநகரப் போக்குவரத்துக் கழகம் (MTC) மற்றும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (TNSTC - விழுப்புரம் மண்டலம்) மாமல்லபுரத்தில் இருக்கும் பேருந்து நிலையத்தில் இருந்து திருத்தணி, தாம்பரம், செங்கல்பட்டு, கல்பாக்கம், திருப்போரூர், கோயம்பேடு மற்றும் திருவான்மியூர் உள்ளிட்ட பல்வேறு இடங்களுக்குத் தங்கள் பேருந்துகளை இயக்குகின்றன. தற்போதுள்ள பேருந்து நிலையம் உள்ள இடத்தில் போதிய இடவசதி இல்லாததால், கிழக்கு கடற்கரை சாலை  மற்றும் திருக்கழுக்குன்றம் சாலை அருகாமையில் புதிய பேருந்து நிலையம் அமைக்க முன்மொழியப்பட்டது.

புதிதாக அமையவிருக்கின்ற இந்தப் பேருந்து நிலையத்தில் முன் பதிவு மையம், தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம், சுற்றுலா தகவல் மையம், மருந்தகம், தாய்மார்கள் பாலூட்டும் அறை, பணியாளர்கள் தங்கும் விடுதி, பயணிகள் ஓய்விடம், வாகன நிறுத்துமிடம் உள்ளிட்ட வசதிகளைக் கொண்டதாக அமையும். ஆகவே இந்த பேருந்து நிலையத்தை விரைவாக இந்த பகுதியில் கொண்டு வருவதற்குண்டான அனைத்து மேம்பாட்டு பணிகளையும் விரைவுபடுத்த திட்டமிட்டிருக்கின்றோம். இதோடு மட்டுமல்லாமல் கிளாம்பாக்கம், குத்தம்பாக்கம் மற்றும் செங்கல்பட்டு ஆகிய பகுதிகளில் புதிய பேருந்து நிலையங்களும், முடிச்சூர் பகுதியில் ஆம்னி பேருந்துகள் நிறுத்துவதற்குண்டான பேருந்து நிலையமும் அமைப்பதற்குண்டான திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன.

இந்த ஆட்சி காலத்தில், புதிய பேருந்து நிலையங்களும் ஏற்கனவே தொடங்கப்பட்டு பணியில் மந்தமாக இருந்த பேருந்து நிலையங்களையும் விரைவுபடுத்துகின்ற பணிகளையும் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் மாமல்லபுரத்தை துணைக்கோள் நகரமாக்கும் பணியும் நடைபெற்று கொண்டிருப்பதாகவும் **மாண்புமிகு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான திரு.பி.கே.சேகர்பாபு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.**

இந்த ஆய்வின்போது வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா இ.ஆ.ப., அவர்கள், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் திரு.அன்சூல் மிஸ்ரா இ.ஆ.ப., அவர்கள், திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.எஸ்.பாலாஜி அவர்கள், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.ர. ராகுல்நாத், இ.ஆ.ப., அவர்கள், திருப்போரூர் ஒன்றிய குழுத் தலைவர் திரு.இதயவர்மன் அவர்கள், திருப்போரூர் வேளாண்மை ஆத்மா குழுத்தலைவர் திரு.பையனூர் சேகர் அவர்கள், மாமல்லபுரம் பேரூராட்சித் தலைவர் திருமதி.வளர்மதி அவர்கள், தலைமைத் திட்ட அமைப்பாளர் திரு.எஸ்.ருத்ரமூர்த்தி அவர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.